கூடியவர்களுக்கு அவர்கள் வசிக்கின்ற கூரை வீட்டை ஓடு போட்ட வீடாகவோ அல்லது ஒழுகாத வீடாகவோ அமைக்கும் நிலைமையில் அவர்களுக்குப் பாதித் தொகையை மானியமாகவும், பாதித் தொகையை கடனாகவும் வழங்கி அவர்களுடைய இருப்பிடத்திற்கு ஒரு பாதுகாப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி செய்து, இந்தத் தமிழகத்திலே எல்லா ஏழை மக்களும் நல்ல குடியிருப்பு வசதியைப் பெற்றிருக்கிறார்கள் என்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, கவர்னருடைய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களை கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

சமீபத்திலே மறைந்த இராஜாஜி அவர்களுடைய சேவைகளை எல்லாம் பாராட்டி அவருக்கு புகழாரம் செலுத்தும் வகையிலே கவர்னருடைய உரையின் துவக்கத்திலே கூறப்பட்டிருக்கிறது. அவர், மேற்கொண்ட மது விலக்குத் திட்டத்தை இந்த அரசு தீவிரப்படுத்தி இருந்தால் இன்னும் அவருக்கு நல்ல முறையிலே நன்றி செலுத்தியவர்களாக இருந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, குடிதண்ணீர் பிரச்னையைப் பொறுத்தவரையில் எங்களுடைய ஆண்டிப்பட்டிப் பகுதியில் நிலைமை மிகவும் மோசமாக இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, அந்தப் பகுதியைச் சேர்ந்த புள்ளிமான் கோம்பை, மயிலாடும்பாரை, கண்டமனூர், சுடமலைக்குண்டு போன்ற இடங்களில் குடி தண்ணீருக்கு மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இதை இரண்டு ஆண்டுகளாக நானும் இந்த சட்டமன்றத்திலே இதைப்பற்றி அடிக்கடி சொல்லிக்கொண்டு தான் இருக்கிறேன். ஆனால், ஏனோ எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தானே இதைச் சொல்லுகிறார் என்று கருதி, அங்கே குடிதண்ணீர் கொடுக்கக் கூடிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலை வசதியை எடுத்துக்கொண்டாலும், அங்கே இன்னும் பஸ்களே போகாத பல கிராமங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. புள்ளிமான் கோம்பை ஆண்டிப்பட்டியிலிருந்து 15 மைல்கள் இருக்கும். ஆண்டிப்பட்டிற்கு அங்கிருக்கும் மக்கள் செல்ல வேண்டுமானால் இரண்டு நாட்கள் அந்த மக்கள் நடந்தே வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆண்டிப்பட்டி ஒன்றிய பகுதி. மற்றும் பள்ளிக்கூட வசதியும் அங்கே மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அங்கே பல இடங்களில் மரத்தடிகளிலேயும், கூரை வேயப்பட்ட இடங்களிலேயும் தான் பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, ஆண்டிப்பட்டி ஒன்றியத்திற்கு பள்ளிக்கூட கட்டிட வசதிக்காக அதிகமான

பணம் ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக அந்த ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மஞ்சநாய்க்கன் பட்டியில் 1965 ஆம் ஆண்டில் பள்ளிக்கூடம் ஒன்றை கட்ட அரசு ஆணை யிட்டது. அதன்படி பள்ளிக்கூடம் ஒன்று கட்டப்பட்டு, பாதியிலேயே நிற்கிறது. காரணம் அங்கே பல முதலாளிகள் இடைஞ்சல் செய்யக்கூடிய நிலையிலே அந்த கட்டிடம் முற்றுப் பெறுமல் அப்படியே இருந்துகொண்டிருக் கிறது. சபைத் தலைவர் அவர்களுடைய அனுமதியின்படி அதற்கான இந்த போட்டோவைக் கூட இங்கே காண்பிக்க ஆசைப்படுகிறேன். (போட்டோவை பேரவைக்கு காண்பிக்கிருர்.) ஆகவே, அந்தப் பள்ளி பாதியிலே நின்றிருக் கிறது. பல முறை அந்த முதலாளிகள் அதைக் கட்டக் கூடாது என்று ஸ்டே கூட வாங்கினுர்கள். ஆனல் அவை எல்லாம் கூட தள்ளப்பட்டு, அந்த இடம் ஊராட்சி மன்றத்திற்கே சொந்தமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இது விஷயத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்தைச் செலுத்தி, அந்த மஞ்சநாயக்கன்பட்டி பள்ளிக்கூடத்தைக் கட்டி முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பண்டப் பொருள்கள் விநியோகத்தைப் பற்றி நான் கொஞ்ச நேரத்திற்கு முன்னல் கூட பேசினேன். அங்கே இருக்கின்ற தாசில்தார் * * * மற்ற பெர்மிட்தாரர்களிடம் காசு வாங்கிக்கொண்டுதான் காரியங்களைச் செய் வதாக சொல்லுகிருர்கள். அவர் மாத்திரம் சுமார் 3 லட்சம் ரூபாய்வரை சர்க்கரை விநியோகத்திலே வாங்கியிருப்பதாக மக்களால் பேசிக்கொள்ளப்படு கிறது. ஆகவே, இந்த விஷயத்திலே அரசு உடனடியாக கண்காணித்து . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): உறுப்பினர் அவர்கள் மன்றத்தில் இல்லாத தாசில்தார் அவர்களைப் பெயர் சொல்லி அவர் பணம் வாங்கினுர் என்று பேசுவது உகந்ததில்லை. பொதுவாக குற்றச்சாட்டை சொல்லுங்கள். அப்படி ஏதாவது அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று விரும்பினல் அதை அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள்.

திரு. நா. வெ. குருசாமி: நான் கேள்வி நேரத்தின் பொழுது திரு. கே. டி. கே. தங்கமணி அப்படி பேசியதை வைத்துத்தான் நானும் பெயர் சொல்லி பேச வேண்டி வந்தது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): திரு. குருசாமி அவர்கள் பேசும் பொழுது குறிப்பிட்ட தாசில்தார் பெயரைச் சொல்லி பணம்

*** மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.